MLWA HSS Madurai - 625001 (Run by Jain Educational and Empowerment Trust)
2 Mark Problem Only L 9 - L 14
11th Standard

Date : 15-Jan-19

**Prepared by M.MuthuSelvam Cell : 9842104826**

Reg.No. :

Time : 01:30:00 Hrs

Total Marks : 78

**Answer All**

39 x 2 = 78

1) கீழ்கண்ட பிழைகளை இருப்பாய்வு தயாரிப்பதற்கு முன்பாகத் திருத்தம் செய்யவும்.
(அ) வெளித் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ரூ.2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) உள் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ.14,000 த்திற்கு பதிலாக ரூ.15,000 என எடுக்கப்பட்டுள்ளது.
(இ) கொள்முதல் கணக்கின் மொத்தத் தொகையை முன் எடுத்து எழுதும் போது ரூ.100 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

2) இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) விற்பனை ஏட்டில் ரூ.400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ரூ.500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(இ) கொள்முதல் ஏட்டில் ரூ.600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(உ) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு ஏட்டில் ரூ.800 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

3) கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.
(அ) விற்பனை ஏட்டில் ரூ.100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
(ஆ) விற்பனை ஏட்டில் ரூ. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது
(இ) கொள்ள்முதல் ஏட்டில் ரூ. 300 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
(ஈ) கொள்முதல் ஏட்டில் ரூ.400 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

4) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) கொள்முதல் ஏட்டின் மொத்தத்தில் ரூ.90 குறைவாக முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(ஆ) கொள்முதல் ஏட்டின் மொத்தத்தில் ரூ.180 அதிகமாக முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(இ) விற்பனை ஏட்டின் மொத்தத்தில் ரூ.270 குறைவாக முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(ஈ) விற்பனைத் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ரூ.360 அதிகமாக முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(உ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ரூ.450 குறைவாக முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது

5) இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்:
(அ) விற்பனை ஏட்டில் ரூ.1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) ரூ.500 கூலி செலுத்தியது தவறாக இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்பட்டுள்ளது.

6) பின்வருபவை முதலினச் செலவுகளா அல்லது வருவாயினச் செலவுகளா என்பதை காரணத்துடன் விளக்கவும்.
(i) தொழிற்சாலை தொடங்க உரிமம் பெறுவதற்காகச் செலுத்தியக் கட்டணம் ரூ 25,000
(ii) தொழிற்கூடம் கட்டுவதற்கானச் செலவு செய்தது ரூ 2,00,000 மற்றும் கட்டுமானப் பொருட்கள் சேகரித்து வைப்பதற்காக தற்காலிக குடிசைகள் கட்டியச் செலவு ரூ 10,000
(iii) வாங்கிய பழைய இயந்திரத்தைப் புதுப்பிப்பதற்கானச் செலவு ரூ 5,000.

7) விக்டரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31, டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| சரிகட்டப்பட்ட கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 7,000 |
| விற்பனை | 90,000 | உள்தூக்குக் கூலி | 3,000 |
| சரக்கு கொள்முதலுகான உரிமைத்தொகை | 4,000 | சரக்கு கொள்முதலுகான இறக்குமதி வரி | 60,000 |
| சரக்கு கொள்முதலுகான நகர் நுழைவு வரி | 2,000 | கொள்முதல் மீதான கப்பல்துறைச் செலவுகள் | 5,000 |
| சரக்கு உற்பத்திக்கான அடக்க விலை | 5,000 | | |

8) ஜனவரி 1, 2015 அன்று வெளிநாட்டிலிருந்து கொதிகலன் ஒன்று ரூ. 10,000க்கு வாங்கப்பட்டது. கப்பல் ஏற்றுக்கட்டணம் ரூ. 2,000, இறக்குமதி வரி ரூ. 7,000 மற்றும் நிறுவுதல் செலவிற்காக ரூ. 1,000 செலவிடப்பட்டது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் எனக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்பெறுகின்றன.

9) கீழ்காணும் தகவல்களிலிருந்து 2016, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.1.2016) | 10,000 |
| கொள்முதல் | 26,100 |
| விற்பனை | 40,600 |
| இறுதிச் சரக்கிருப்பு (31.12.2016) | 13,500 |

10) பின்வரும் பிழைகளை, இருப்பாய்வு தயாரித்த பின் திருத்தம் செய்யவும்.
(அ) ராமுவிற்கு ரூ.1,000 சம்பளம் செலுத்தியது தவறாவறாக அவரின் கணக்கில் பற்று வைக்க வைக்க வைக்கப்பட்டுள்ளது.
(ஆ) கடனுக்கு பாலுவுக்கு ரூ.450 க்கு சரக்கு விற்றது பாலபாலன் கணக்கில் பற்று வைக்க வைக்க வைக்கபட்டுள்ளது

11) 1.1.2016 அன்று ரூ.5,000 மதிப்புள்ள அறைகலன் ஒன்று வாங்கப்பட்டது, நிறுவுதல் செலவுகள் ரூ.1,000. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் ஒதுக்க வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டில் பதிவுகள் தருக.

12) இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) கொள்முதல் ஏட்டில் ரூ.900 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) பழைய அறைகலன் விற்றது ரூ.1,000 விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
(இ) அருளிடமிருந்து கடனுக்கு ரூ.1,500 க்கு சரக்கு வாங்கியது ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை

13) ஒரு நிறுவனம் ரூ. 40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ரூ. 2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத்

தேய்மானத்தொகையை கணக்கிடுக.

14) ஒரு நிறுமம் ரூ. 1,80,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவுகைச் செலவாக ரூ. 10,000 செலவழித்தது. எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள் மற்றும் இறுதி மதிப்பு ரூ. 15,000. ஆண்டுதோறும் நீக்கப்படவேண்டிய தேய்மானத் தொகையை நேர்க்கோட்டு முறையில் கணக்கிடவும்.

15) நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க. மேலும் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31 ல் முடிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஜனவரி 1, 2016 இயந்திரம் வாங்கியதற்காக செலுத்தியது | ரூ. 1,00,000 |
| ஜனவரி 1, 2016 இயந்திரம் கொண்டு வருவதற்கு போக்குவரத்துச் செலவு | ரூ. 1,000 |
| ஜனவரி 1, 2016 நிறுவுகைச் செலவுகள் | ரூ. 9,000 |
| இறுதி மதிப்பு | ரூ. 5,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் | 10 ஆண்டுகள் |

16) பின்வரும் பிழைகளின் ஒவ்வொன்றிலும் பாதிக்கும் கணக்கு / கணக்குகளைக் கூறவும்.
(அ) கடனுக்கு சரண்யாவிடமிருந்து ரூ.150 க்கு சரக்கு வாங்கியது. அவரது கணக்கில் ப ப பற்றுப்பக்கம் எடுத்தெழுதப்பட்டுள்ளது.
(ஆ) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ.4,500 இரு முறை பேரேட்டில் எடுத்து எழுதப்பட்டுள்ளது

17) ஒரு நிறுமம் ரூ. 50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றைன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ரூ. 2,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை, மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

18) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.
(அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.500 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(இ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ரூ.700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஈ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ரூ.800 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

19) நிலைச் சொத்து ரூ. 50,000க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15%. குறைந்து செல் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

20) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
(அ) கொள்முதல் ஏட்டில் ரூ.10,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ரூ.500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
(இ) அகில் நிலவனுக்கு கடனுக்கு ரூ.456 க்கு சரக்கு விற்றது அவர் கணக்கில் ரூ.654 என வரவு வைக்கப்பட்டுள்ளள்ளது

21) பின்வரும் ஒவ்வொரு பிழையிலும் பாதிக்கப்பட்டுள்ள கணக்குகளைக் கூறவும்.
(அ) வா வாசுவுக்கு ரூ.1,000-த்துக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் ப ப பதிவுசெய்யப்படாமலுள்ளது.
(ஆ) கொமுதல் ஏட்டின் மொத்தம் ரூ.2,500 இருமுறை பேரேட்டில் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

22) கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.
(i) நிலைச்சொத்து வாங்குவதற்காக, இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ரூ 10,000.
(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை .
(iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு.
(iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.

23) பின்வருபவை முதலினச் செலவா, வருவாயினச் செலவா அல்லது நீள்பயன் வருவாயினச் செலவா என்பதை காரணத்துடன் விளக்கவும்.
(i) புதிய பொருளை அறிமுகப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட விளம்பரச்செலவுகள் ரூ 10 கோடி
(ii) புதிய இயந்திரத்தைக் கொள்முதல் செய்து அலுவலகத்திற்கு கொண்டு வந்து நிறுவுவதற்கானச் செலவு.
(iii) புதிதாக இயந்திரம் வாங்கியதன் மீதான ஏற்றிச் செல் செலவு, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வண்டிக் கட்டணம்.

24) பின்வருபவை முதலின, வருவாயின, இனங்களா என்பதை கூறுக.
(i) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக்கட்டியது ரூ 5,000
(ii) பழைய மகிழுந்து வாங்கியது ரூ 30,000 மேலும், அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கானச் செலவு ரூ 2,000
(iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ரூ 10,000
(iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச் செல் செலவு, வண்டிக்கட்டணம் ரூ 150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ரூ 200
(v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்ததற்கானச் செலவு ரூ .150.

25) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.
(அ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகையில் ரூ.350 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) ரொக்க ஏட்டின் பற்றுப் பக்கத்திலுள்ள தள்ளுபடிப் பத்தியின் மொத்தம் ரூ.420 பேரேட்டில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது.
(இ) கொள்முதல் ஏட்டின் ஒரு பக்கத்தின் கூட்டுத்தொகை ரூ.5,353 அடுத்த பக்கத்திற்கு முன் எடுத்து எழுதும் போது ரூ.5,533 என எழுதப்பட்டுள்ளள்ளது.
(ஈ) சம்பள சம்பளம் ரூ.2,400 பேரேட்டில் ரூ.24,000 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(உ) செம்பியன்மாதேவியிடமிருந்து கடனுக்கு ரூ.180 க்கு சரக்கு வாங்கியது அவர் கணக்கில் ரூ.1,800 என எடுத்து எழுதப்பட்டுள்ளது

26) சரவணனின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் மூலம், டிசம்பர் 31, 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த இலாபத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,50,000 | ஆண்டிற்கான நிகர விற்பனை | 4,00,00 |
| நேரடிச் செலவுகள் | 8,000 | ஆண்டிற்கான நிகர கொள்முதல் | 1,50,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 25,000 | | |

27) ஜுலை 1, 2016 அன்று, அறைகலன் ரூ. 60,000 க்கு வாங்கப்பட்டது. அதன் வாழ்நாள் 5 ஆண்டுகள். 5 ஆண்டுகள் முடிவில் அதன் இறுதி மதிப்பு ரூ. 4,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க

28) கீழ்கண்ட தகவல்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க.

| | |
|---|---|
| இயந்திரம் வாங்கிய விலை | ரூ. 2,00,000 |
| மூலதனமாக்கப்பட வேண்டிய செலவுகள் | ரூ. 50,000 |
| எதிர்நோக்கும் இறுதி மதிப்பு | ரூ. 15,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் | 5 வருடங்கள் |

29) பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.
(அ) பெற்ற வாடகைவாடகைக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ.900 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(ஆ) பெற்ற வாடகைவாடகைக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ.1,000 அதிகமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(இ) சம்பள சம்பளக் கணக்கின் கூட்டுத் தொகை ரூ.1,100 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(ஈ) சம்பள சம்பளக் கணக்கின் கூட்டுத் தொகை ரூ.1,200 கூடுதலாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

30) கீழ்க்காணும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.
(அ) கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகையை அடுத்த பக்கத்திற்கு எடுத்து எழுதும் போது ரூ.100 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(ஆ)கொள்முதல் திருப்ப ஏட்டின் கூட்டுத் தொகையைகையை அடுத்த பக்கத்தில் எடுத்து எழுதும் போது ரூ.200 அதிகமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(இ) விற்பனை ஏட்டின் கூட்டுத் தொகையை அடுத்த பக்கத்தில் எடுத்து எழுதும் போது ரூ.300 அதிகமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.
(ஈ) விற்பனைத் திருப்ப ஏட்டின் கூட்டுத்தொகையை அடுத்த பக்கத்தில் எடுத்து எழுதும் போது ரூ.400 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது

31) ஒரு நிறுவனம், 1.1.2017 அன்று ரூ. 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள், மற்றும் அதன் இறுதி மதிப்பு ரூ. 10,000. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அதன் தேய்மானத் தொகையை நேர்க்கோட்டு முறையில் கணக்கிடவும்.

32) இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) வாடகை செலுத்தியது முன் எடுத்து எழுதும் போது அடுத்த பக்கத்தில் ரூ.500 குறைவாக எழுதப்பட்டுள்ளது.
(ஆ) கூலி செலுத்தியது முன் எடுத்து எழுதும் போது ரூ.250 கூடுதலாக எழுதப்பட்டுள்ளது.

33) கீழ்க்கண்ட விவரங்களில் இருந்து சிவசங்கரின் ஏடுகளில் வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்

| **விவரம்** | **ரூ** | **விவரம்** | **ரூ** |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,500 | கொள்முதல் | 3,500 |
| விற்பனை | 4,600 | இறுதிச் சரக்கிருப்பு | 1,300 |

34) பின்வரும் செலவுகளை முதலின, வருவாயினச் செலவுகள் என வகைப்படுத்துக.
(i) ரூ 3,200 பின்வருமாறு இயந்திரத்தின் மீது செலவழிக்கப்பட்டது.
(அ) உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க சேர்க்கப்பட்ட கூடுதல் இயந்திரத்தின் மதிப்பு ரூ 2,000
(ஆ) கவனக்குறைவால் ஏற்பட்ட பழுதினைச் சரி செய்ய ரூ 1,200 செலவழிக்கப்பட்டது.
(ii) வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க, அதன் இயந்திரத்தைப் புதுப்பிக்க மேற்கொண்ட செலவு ரூ 25,000.

35) ஏப்ரல் 1, 2015 அன்று ஒரு நிறுவனம் ரூ. 50,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. அதன் வாழ்நாள் 6 ஆண்டுகள். குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 30% தேய்மானம் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31 - ல் முடிக்கப்பெறுகின்றன. ஏப்ரல் 1, 2015 முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு தயாரிக்கவும்

36) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) விற்பனை ஏட்டின் மொத்த தொகையில் ரூ.100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ரூ.200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

37) கீழ்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| சொத்தின் அடக்கவிலை | ரூ. 10,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் | 10 வருடங்கள் |
| எதிர்நோக்கும் இறுதி மதிப்பு | ரூ.2,000 |

38) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையைக் கணக்கிடுக

| **விவரம்** | **ரூ** |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 8,000 |
| கொள்முதல் | 60,000 |
| நேரடிச் செலவுகள் | 5,000 |
| மறைமுகச் செலவுகள் | 6,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 9,000 |

39) பின்வரும் செலவினங்கள் முதலினம், வருவாயினம், மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளா எனக் கூறுக.
(i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம், மற்றும் நிறுவுகைச் செலவுகள் ரூ 1,000
(ii) அலுவலக வாடகைச் செலுத்தியது ரூ 2,000
(iii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ரூ 5,000
(iv) ஐந்து வருடங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மோட்டார் வாகனம் மீதான வாடகை, ஒவ்வொரு வருடமும் செலுத்தப்படுகிறது.

## All the Best

****************************************